# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

# OS.No.36/2024

dated : 14.10.2025

P.W.1

Name சுந்தரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)**

என் திருமணம் ஆண்டு ஞாபகமில்லை. என்னுடைய திருமண ஆண்டு தெரியாது. சண்முகசுந்தரம் 2010 ம் ஆண்டு இறந்தார். 2015 ம் ஆண்டில்தான் என் பெயருக்கும் என் மகள் பெயருக்கும் ஆதார் கார்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். கணவர் பெயர் என்ற இடத்தில் இறப்பு என்ற விதத்தை குறிக்கும் விதமாக லேட் என்று குறிப்பார்கள் என்றால் சரிதான். எனது மற்றும் என் மகளின் ஆதார் அடையாள அட்டைகளில் சண்முகசுந்தரம் என்ற பெயருக்கு முன்பு அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வடமலைசமுத்திரத்திலிருந்து ஆழ்வார்குறிச்சிக்கு எந்த ஆண்டு சென்றேன் என்று ஞாபகமில்லை. வடமலைசமுத்திரத்தில் இருக்கும் வீட்டை சண்முகசுந்தரத்தின் மருத்துவச் செலவிற்காக விற்றுவிட்டோம். சண்முகசுந்தரத்திற்கு சிகிச்சையளித்த மருத்துவ ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. கமலா என்பவரிடம் அந்த வீட்டை 2012 ஆண்டு விற்றோம். அவ்வாறு வீட்டை விற்றவுடன் அந்த வீட்டிலிருந்து

ஆழ்வார்குறிச்சிக்கு சென்றுவிட்டோம். குடும்ப அட்டையில் முகவரி மாற்றம் என்பதை மேற்குறிப்பு செய்து பெற்றுள்ளோம். அந்த முகவரி மாற்ற விவரத்தில் சண்முகசுந்தரம் இறந்துவிட்ட விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வடமலைசமுத்திரத்திரம் கதவு எண்.92/பி என்ற வீட்டில்தான் குடியிருந்தோம். எனக்கு படிக்கத் தெரியாது எனவே என் கணவர் இறந்த இடத்தின் முகவரி என்னவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. இறப்பு சான்றுக்கு 1ம் பிரதிவாதி விண்ணபித்தார். யார் விண்ணப்பித்தார் என்பதை அந்த விண்ணப்ப நகலை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். நான் விண்ணப்பிக்கவில்லை. என்னுடைய வேண்டுகோளின்பேரில் 1ம் பிரதிவாதி விண்ணப்பித்தார். என்னுடைய வாக்காளர் அடையாள அட்டையை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அது போன்ற ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போதைய குடும்ப அட்டையையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அது போன்ற ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னர் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சண்முகசுந்தரத்தின் மனைவியாக இருந்திருந்தால் புகார் கொடுத்திருப்பேன் என்றும் சட்டப்படியான மனைவி இல்லை என்பதால்தான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.12 மற்றும்

13 ஆவணங்களுக்கு நகல் பெற யார் விண்ணப்பித்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12 மற்றும் 13 விடுதலை ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. எனக்கு மேற்படி ஆவணங்களை இறந்துபோன வழக்கறிஞர் நகல் பெற்றுக் கொடுத்தார். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த 09.01.2013 தேதியிட்ட நன்கொடை ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 22.08.2017ல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 20.12.2013ல் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 03.01.2014 தேதியில் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 02.01.2017க்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு பொய்யான காரணங்களை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரங்கள் காலவரம்பினால் பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 குடும்ப அட்டை வா.சா.ஆ.4 அடைமான ஆவணத்தில் உள்ள குடும்ப உறுப்பினர் எண் வெவ்வேறாக உள்ளது என்றும் அதனால் வங்கி மேலாளர் மற்றும் வருவாய் வட்டாட்சியரை மட்டும் விசாரித்தால் மட்டுமே எந்த குடும்ப அட்டை சரியானது என்று தெரியும் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்து பூர்விக சொத்து என்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு சொத்தின் நான்கு மால் விவரம் தெரியாது புல எண் தெரியாது. வடமலைசமுத்திரத்திரம் தெற்கு தெரு பள்ளிக்கூட வீதியில் என் மகள் பிறந்தார்.

நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களிலும் என் மகள் பிறந்துள்ள இடம் பற்றியவிவரங்கள் வேறு முகவரியாக வடக்கு தெரு என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவரது பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சண்முகசுந்தரத்தின் வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆவணம் தாக்கல் செய்ததாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. என் மகளது பிறப்பு வீ.கே.புதூர் நகராட்சியில் பதிவு செய்யப்பட்டதாக ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. நான் சண்முகசுந்தரத்தின் சட்டப்பூர்வமான வாரிசு அல்ல என்பதால் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே 1, 2 பிரதிவாதிகளுக்கு மட்டுமே சொத்துக்களில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல. சண்முகசுந்தரத்தின் மனைவி அனுசுயா என்பவரும் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்படாததால் வழக்கு பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.10.14 18:01:00 +0530